## அண்ணாவியார் எஸ்.தம்பிஐயாவின்

# கலைப்புலம்




கலாநிதி த. கலாமணி

# அண்ணாவியார் எஸ். தம்பிஜயாவின்
# **கலைப்புலம்**

கலாநிதி த. கலாமணி

**அண்ணாவியார் எஸ்.தம்பிஐயாவின் கலைப்புலம்**

**கலாநிதி த.கலாமணி**

முதற்பதிப்பு: தை 2023
© க.பரணீதரன்
அட்டைப்படம் : கனிவுமதி

**வடிவமைப்பு : க.பரணீதரன்**

வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்

பக்கம்:28

விலை: 100.00

அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

**Annaviyar S. Thamiaiyavin Kalaipulam**

Dr. T.Kalamany

First Edition:January2023
© K.Bharaneetharan
Cover Picture : Kanivumathi

Published by Jeevanathy, Kalai aham, Alvai

Pages: 28

Price: 100.00

Printed at Baranee Printers, Nelliady.

ISBN: 978-624-5881-77-2

**ஜீவநதி வெளியீடு – 257**

நடிகராய், அண்ணாவியாராய், சோதிடராய்
காத்தவராயர் ஆலய அர்ச்சகராய், நல்ல தந்தையாய்
வாழ்ந்த என் அன்புத்தந்தை
சபாபதி தம்பிஐயா அவர்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்

# பதிப்புரை

ஈழத்து நாடக வரலாற்றில் தவிர்த்துவிட முடியாத இசை நாடக நடிகரும் அண்ணாவியாருமான எஸ்.தம்பிஜயா அவர்களின் கலைப்புலம் பற்றி கலாநிதி த.கலாமணி அவர்கள் எழுதிய “அண்ணாவியார் எஸ்.தம்பிஜயாவின் கலைப்புலம்” என்னும் இச்சிறிய நூல், ஜீவநதியின் வெளியீடாக வெளி வருவதையிட்டு மகிழ்வடைகின்றோம். அண்ணாவியார் எஸ்.தம்பிஜயா அவர்கள் 2000 மேற்பட்ட மேடைகளில் நாடகங்களை நடித்துள்ளார். பல நாடகப்பிரதிகளை எழுதியதோடு பல நாடகங்களை அண்ணாவியம் செய்துள்ளார். தன்னை பிரபலப்படுத்தாத அடக்கமான சுபாவம் காரணமாக பல இடங்களில் அவர் தவிர்த்து விடப்பட்டிருந்தார். ஆனால் அவரது நாடகம் சார்ந்த செயற்பாடுகள் என்றும் போற்றுதற்குரியது. நாடகமே வாழ்க்கையாய் வாழ்ந்து மடிந்தவர் எஸ்.தம்பிஜயா. பல கலைஞர்களின் உருவாக்கத்திற்கும், பல நாடகப் பிரதிகளின் உருவாக்கத்திற்கும் காரணமானவர் எஸ்.தம்பிஜயா. சோதிடக்கலையை நன்கு கற்று சிறப்பாக பலனை, நிலையத்தை கணிக்கக்கூடியவராக இருந்தார். வடமராட்சிப் பகுதியில் பல நூறு வீடுகளுக்கான நிலையங்களையும், கிணறு களையும் கணித்துக் கொடுத்து உதவியவர். ஒழுக்கசீலராய் அமைதியான வாழ்வு வாழ்ந்தவர். அண்ணாவியார் எஸ்.தம்பிஜயா அவர்களின் உருவச்சிலை, கலைஅகம் வளாகத்தில் அமைகின்ற வேளையில் இந்நூலை வெளியிட்டு அவர் புகழை மீட்டிப்பார்க்க முடிந்ததையிட்டு மகிழ்வடைகின்றோம்.

– க.பரணீதரன்

# அண்ணாவியார் எஸ்.தம்பிஐயாவின் கலைப்புலம்

அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா அவர்கள் எமது கிராமத்தின் பெருமை சொல்லும் பிரஜைகளுள் ஒருவர். இவர் இம் மண்ணில் எழுபத்தொரு ஆண்டுகள் சிறப்புற வாழ்ந்தவர்; எமது கிராமத்தின் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தவர். இன்றும் எமது கிராமத்தில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் சில நடைமுறைகளின் ஆரம்பகர்த்தாவாக விளங்கியவர். எமது அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிற் பரிபாலன சபையின் முதலாவது நிருவாகத் தலைவராக விளங்கிய அமரர் எஸ்.தம்பிஐயா அவர்கள், வடமராட்சியின் புகழ்பூத்த இசைநாடக நடிகரும் இசைநாடக அண்ணாவியாரும் ஆவார். பரம்பரை வழிவந்த சோதிடக் கலையைப் பயின்ற இவர் கைரேகை சாஸ்திரம் பார்ப்பதிலும் மனையடி சாஸ்திரத்திலும் கைதேர்ந்தவர் ஆவார். அமரர் தம்பிஐயா அவர்கள் மறைந்து முப்பத்தைந்து ஆண்டுகளாகின்றன. இவர் இம் மண்ணில் பிறந்து நூற்றைந்து ஆண்டுகள் கடந்த நிலையில், எமது கிராமத்தின் ஒரு வரலாற்று அடையாளமாக இன்று இவரது சிலை திறந்து வைக்கப்படுகிறது. இந்நிகழ்வின் சிறப்பை உணர்த்தும் வகையில் அமரர் எஸ்.தம்பிஐயா அவர்களின் கலைப்புல வரலாறு பற்றிய சுருக்கக் குறிப்புகள் இங்கு தரப்படுகின்றன.

### ஜனனமும் குடும்பப் பின்னணியும்

வடமராட்சியின் அல்வாய்க் கிராமத்தில் சபாபதி - கதிராசி தம்பதியினருக்கு 21.07.1917இல் எட்டாவது பிள்ளையாக தம்பிஐயா அவர்கள் பிறந்தார். இளமையில் கல்வியில் ஆர்வம் மிக்கவராய் தேவரையாளிச் சைவ

வித்தியாசாலையில் இவர் கல்வி பயின்றார். சைவப்புலவர் சி.வல்லிபுரம், பண்டிதர் மு.செல்லையா ஆகியோரிடத்தில் தமிழ் இலக்கணமும் இலக்கியமும் கற்று, இளமையிலேயே இலக்கண, இலக்கியப்புலமை உள்ளவராக இவர் காணப்பட்டார்.

குடும்பத்தில் எட்டாவது பிள்ளையாக, மூன்று சகோதரர்களுக்கும் நான்கு சகோதரிகளுக்கும் பாசமுள்ள தம்பியாக தம்பிஐயா அவர்கள் விளங்கியதனால், செல்லப்பிள்ளையாகவும் எல்லோருடைய கவனமும் குவிக்கப்பட்ட ஒருவராகவும் இவர் வளர்ந்து வந்தார். விளையாட்டுக்களிலும் கலைகளிலும் நாட்டம் கொண்ட இவர் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்ட அணி வீரராகவும் உதைபந்தாட்டக்குழு வீரராகவும் திகழ்ந்து பல போட்டிகளில் வெற்றியீட்டித் தந்தார். குடும்பஸ்தனான பின்பும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றின் இறுதி ஆட்டத்தில் "மனோகரா அணி" இளைஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க, முன் அரங்கில் விளையாடிய இவர் எதிரணியின் கோல்காப்பு வீரரினால் முழங்காலில் உதையுண்டு, முழங்கால் நோவினால் நீண்டகாலம் பாதிக்கப்பட்டிருந்தார்.

எஸ்.தம்பிஐயா அவர்களின் பேரனாரும் பூட்டனாரும் நாட்டுக்கூத்துக் கலைஞர்களாக விளங்கியவர்கள். பூட்டனாரான கதிரன் அவர்களால் ஏறத்தாழ இரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்ட காத்தான் கோயில், இன்று வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தான மாக வளர்ச்சி கண்டிருக்கின்றது. சிறுவயது முதல் காத்தான் கோயிலுக்கு விளக்கு வைத்து வந்த தம்பிஐயா அவர்கள், தமது இறுதிக் காலம் வரை இக்கோயிலின் அர்ச்சகராக விளங்கினார். கதிரவன் - காத்தான் - சபாபதி தம்பிஐயா - கலாமணி என்று தொடரும் பரம்பரையில் ஆறாவது தலை முறையைச் சேர்ந்த, தம்பிஐயா அவர்களின் பேரனான க.பரணீதரன் இன்று வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானத்தின் அர்ச்சகராக இருந்து வருகிறார்.

தம்பிஐயா அவர்களின் சிறிய தந்தையாரான சோதிடர் வே.தம்பையா அவர்களால் எழுதப்பட்டு, மைத்துனரான அரியாலை பபூன் செல்லரினால் நெறிப்படுத்தப்பட்ட "அங்குலன் சரித்திரம்" எனும் நாடகத்தில் மூத்த கலைஞர் சிதம்பரியானுடன் சிறுவனான தம்பிஐயா அவர்களும் நடித்திருந்தார். பள்ளிச் சிறுவனாக தம்பிஐயாவை நாடகம் நடிக்க வேண்டாமென அவரின் பெற்றோர்களோ சகோதரர்களோ தடைசெய்யவே இல்லை. நாடகப் பயிற்சியும் அனுபவமும் தனது மகனை முழுமனிதனாக

உருவாக்கும் என்றே தந்தையான சபாபதி நம்பினார்.

பாடசாலையில் "பிறிலிம்" மாணவனாக இருந்த காலத்திலும் எஸ்.எஸ்.சீ வகுப்பு மாணவனாக இருந்த காலத்திலும் பாடசாலை நாடகங்களை நெறிப்படுத்தும் பொறுப்பு அவரது ஆசிரியரான க.முருகேசு அவர்களாலும் தேவரையாளிச் சைவ வித்தியாசாலையின் அந்நாளைய தலைமை ஆசிரியர் பண்டிதர் மு.செல்லையா அவர்களாலும் எஸ்.தம்பிஐயா அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. பின்பு ஒரு சமயம் ஆசிரியர் முருகேசு அவர்கள் தமது பிரதேசத்துக் கலைஞர்களைக் கொண்டு, தாம் எழுதிய மதிவதனா-சத்தியசீலன் என்ற நாடகத்தை மேடையேற்ற விரும்பிய போது, தமது மாணவனான எஸ்.தம்பிஐயாவுக்கே பின் சத்தியசீலன் பாத்திரத்தைத் தந்து, நெறியாளர் பொறுப்பையும் வழங்கியிருந்தார்.

அந்நாளிலே பருத்தித்துறையிலே முதன் முதலாகத் திரையிடப் பட்டிருந்த சாந்த சக்குபாய் எனும் பேசும் படத்தை பண்டிதர் மு.செல்லையா அவர்கள் இசைநாடகப் பிரதியாக எழுதியபோது, அந்நாடகத்தை எஸ்.தம்பிஐயா அவர்களே அண்ணாவியம் செய்து சக்குபாயின் மாமியார் பாத்திரத்தையும் ஏற்றிருந்தார். இந்நாடகம் அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்திலும் வியாபாரிமூலை வீரபத்திரர் ஆலயத்திலும் மேடையேறியது. இந்நாடகம் ரசிகர்களிடம் பெரும் வரவேற்புப் பெற்றது.

எஸ்.தம்பிஐயா அவர்கள் தமது இருபத்தைந்தாவது வயதில் வேலுப்பிள்ளை - சீனிப்பிள்ளை தம்பியினரின் மூத்தமகளான பர்வதம் என்பவரைத் திருமணம் செய்தார். சிறுவயதிலேயே தாய் தந்தையரை இழந்திருந்த தமது மனைவிக்கு தமது வாழ்நாட்காலம் முழுவதும் ஆதரவாக இருந்தார். இல்லறப்பேறின் பயனாக சௌந்தரராஜன், வரதராஜன், பர்வதாமணி, கலாமணி, கீதாமணி, ரவீந்திரன், ராதாமணி ஆகியோரை மக்கட் செல்வங்களாகப் பெற்றார். ஆனால் சௌந்தராஜன், வரத ராஜன், ரவீந்திரன், ராதாமணி ஆகியோர் சிறுபராயத்திலேயே இறந்து போயினர். இச்சோகத்தினால் அவர் துவண்டு போய்விடவில்லை. தமது பிள்ளைகளான பர்வதாமணி, கலாமணி, கீதாமணி ஆகியோரை நல்ல முறையில் வளர்த்து, பல்கலைக் கழகப்பட்டம் பெறச்செய்ய வேண்டும் என்று உறுதிபூண்டிருந் தார். அதில் வெற்றியும் கண்டார். பெண்கள் உயர்கல்வி பெறுவதை விரும்பாத சமூகத்தில், தமது மகளை இக்கிராமத்தின் முதலாவது பெண் பட்டதாரியாக்கினார்.

இதேவேளை, பருத்தித்துறை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மையின் ஆலயவாயிலில் நேர்த்திக்காகப் பல நாடகங்கள் மேடை யேற்றப்படுவதை எஸ்.தம்பிஐயா அவர்களின் தந்தையாரான கா.சபாபதி அவர்கள் அறிந்திருந்தார். தமது மகன் சிவகுரு எஸ்.எஸ்.சி.பரீட்சையில் சித்தி பெற்றால் தனது இளைய மகன் தம்பிஐயாவைக் கொண்டு நாடகம் ஒன்றைப் பழக்கி மேடையேற்றுவதாக நேர்த்தி வைத்தார். அவரின் நேர்த்தியை பத்திர காளி அம்மை நிறைவேற்றி வைத்தாள். இதனால் மோகினி - ருக்குமாங்கதா என்ற இசைநாடகத்தை எஸ்.தம்பிஐயா அவர்கள் அண்ணாவியம் செய்து, முன் - ருக்குமாங்கதனாகவும் நடித்து மேடையேற்றியபோது வடமராட்சி ரசிகர்கள் பலரும் பாராட்டை வழங்கியிருந்தனர்.

எஸ்.தம்பிஐயா அவர்கள் பாடசாலை மாணவனாக இருந்த காலத்திலேயே அவரின் தந்தையார் தமது நேர்த்திக்கடனுக்காக நாடக மொன்றைத் தயாரித்தளிக்கும் ஆற்றலைத் தமது மகன் கொண்டிருந்தார் என்ற நம்பிக்கையோடு இருந்தார் என்பதை இச்சம்பவம் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

எஸ்.தம்பிஐயாவின் நாடக முயற்சிகளுக்குப் பெற்றோரும் சகோதரர்களும் எப்போதும் ஆதரவாகவே இருந்தனர். வரணி, பளை, வராத்துப்பளை போன்ற இடங்களுக்குச் சென்று அப்பிரதேச மக்களுக்கு இசை நாடகங்களைப் "பழக்கி" வருவதற்கு உதவக்கூடிய வகையில் புதிய சைக்கிள் ஒன்றை "இளையண்ணன் தியாகு" வாங்கிக் கொடுத்திருந்தார். எஸ்.தம்பிஐயா அவர்கள் திருமணம்செய்து கொண்ட பின்னர் அவரின் மனைவியார் அவரின் நாடக முயற்சிகளுக்கு என்றும் பக்கபலமாகவே இருந்து வந்துள்ளார்.

வீட்டில் நாடகப் பழக்கம் நடைபெறும் போதும் நாடகத்துக்காகத் தமது கணவர் வெளியூர் செல்லும் வேளைகளிலும் குடும்பப் பொறுப்புகளை எடுத்துக்கொண்டு, தனது கணவரின் ஆளுமை உருவாக்கத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் பார்த்துக் கொண்டார்.

எஸ்.தம்பிஐயா அவர்களின் ஆளுமை உருவாக்கத்தில் குடும்பப் பின்னணி மாத்திரமன்றி, சமூக வரலாற்றுப் பின்னணியும் கலாசாரப் பின்னணியும் தனியாள்சார் ஆற்றல்களும் கூட செல்வாக்குச் செலுத்தி யுள்ளன. விரிவஞ்சி, இக்காரணிகள் குறித்து சுருக்கமாக அடுத்து வரும் பிரிவுகளில் நோக்கப்படுகின்றது.

## சமூக வரலாற்றுப் பின்னணி

ஒருவரின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் பரம்பரையும் சூழலும் அடங்கும். பரம்பரைக்காரணிகள் ஒருவரின் மூதாதையரிடமிருந்து வழிவழியாக நிறமூர்த்தங்களால் கடத்தப்படுபவை. பரம்பரைக்கூடாக பல குணாம்சங்களும் இயல்புகளும் திறமைகளும் ஒருவருக்குக் கடத்தப்படலாமெனினும் அவற்றை விருத்தி செய்வதற்கான சூழலும் காணப்படும்போதே அத்திறமைகள் நன்கு வெளிப்பட முடியும். ஒருவர் தனது ஆளுமையைக் கட்டியெழுப்பிக் கொள்ளக்கூடிய சூழலும் சந்தர்ப்பங்களும் அவருக்குக் கிடைக்கும்போதே சிறந்த ஆளுமையை உருவாக்கிக் கொள்ள முடிகிறது.

வடமராட்சி ஒரு கலை மலிந்த பூமி என்பர். வடமராட்சி மண்ணி லிருந்து பல கலைஞர்களும் கல்விமான்களும் உருவாகியுள்ளனர்; உருவாகி வருகின்றனர். இதனால் வடமராட்சி மண்ணானது கலைஞர்களையும் கல்விமான்களையும் கருவிலே திருவுடையாராகக் கொண்டு விளங்கும் பூமி எனச் சிறப்பிக்கப்படும் பெருமையுடையது என்பர்.

வடமராட்சியில் இசைநாடகத்தின் வருகையின் முன் நாட்டுக்கூத்துப் பாரம்பரியம் சிறந்து விளங்கிய சூழலே காணப்பட்டது. தென்னிந்தியாவில் பார்சிமரபுவழி நாடகங்களாக இசை நாடகங்கள் தோற்றம் பெற்றபோது, உடனடியாகவே அந்நாடகவகை பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பு இலங்கைக் கலைஞர்களுக்கு இருக்கவில்லை. ஆனால், தென்னிந்திய நாடகக் கம்பனிகளாக தொழில்நிலைக் குழுக்கள் உருவாக்கப்பட்டு அக்குழுக்கள் இலங்கையிலும் இசைநாடகங்களை மேடையேற்றியபோது, பலரும் அந்நாடக வகையினால் கவரப்பட்டனர். அந்நாடகங்களில் சிலவற்றை, ஏற்கெனவே நாட்டுக்கூத்துக் கலைஞர்களாக இருந்தவர்களே பயின்று தமது கிராமங்களில் மேடையேற்றினர்.

இறக்குமதிக் கலையாக யாழ்ப்பாணத்தின் பல பாகங்களுக்கும் பரவலாக இசைநாடகம் பிரவேசித்தபோது, ஒடுக்கப்பட்ட மக்களிடத்தும் கலையார்வம் வேரூன்றியது. இக்காலத்தில் வடமராட்சியில் அண்ணாவி புதியார், பெரியபொடி அண்ணாவியார், பூசாரி அண்ணாவியார் போன்றோர் உருவாகினர். இவரர்களின் வழித்தோன்றல்களாக வதிரி செல்லப்பா, அல்வாய் சவலை, வதிரி கிருஷ்ணபிள்ளை மாஸ்ரர் ஆகியோரும் இன்னும் பலரும் இந்தியக் கலைஞர்களுடன் ஒப்பிட்டுப் பேசக்கூடிய அளவுக்கு தரமான கலைஞர்களாக உருவாகினர். 1870க்குப் பின்பு பார்சிமரபுவழி

விலாசங்களும் இசைநாடகங்களும் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்த போது, இதே கலைஞர்களும் அந்நாடகங்களாற் கவரப்பட்டு அதே பாணியிலான விலாசங்களையும் இசைநாடகங்களையும் நடிக்கத் தொடங்கினர்.

1919ஆம் ஆண்டு முதலாம் உலகமகாயுத்தத்துக்குப் பின்னர் சங்கரதாஸ் சுவாமி பாணியிலான இசைநாடகங்கள் அதிகமாக இறக்குமதி யாகி அந்நாடகங்களைப் பார்வையிடவும் சில வேளைகளில் இணைந்து நடிக்கவும் கிடைத்த சந்தர்ப்பங்களினால் ஈழத்துக் கலைஞர்களுக்கு இசை நாடகப் பயில்வு எளிதாயிற்று. இச்சூழலும் அல்வாய்க் கிராமத்தின் கலைப்பாரம்பரியமும் தேவரையாளிச் சைவவித்தியாசாலையில் கிடைத்த வாய்ப்புகளும் எஸ்.தம்பிஐயா அவர்கள் நடிகராகவும் அண்ணாவியாராகவும் உருவாக வழிகோலின. தேவரையாளி சைவ வித்தியாசாலையைப் பின்புலமாகக் கொண்ட "தேவரையாளிச் சமூகம்" ஒரு கல்விச் சமூகமாகவே வளர்ச்சியுற்றபோது, "தமது கல்வித்திறத்தினாலும் ஒழுக்கத்தினாலும் சைவ ஆசாரத்தினாலும் எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்று, ஒழுக்கமே உயர்குலம் எனத் தமது வாழ்க்கைமூலம் நிரூபித்தனர்" என தேவரையாளிச் சமூகத்தை உயர் சமூகத்தினரே கூறும் அளவுக்கு தேவரையாளிச் சமூகத்துக்குக் கிடைத்த ஏற்புடைமை கவனத்திற்குரியது. இதன் பேறாகவே உயர்சாதிமக்களின் கோயில் வீதிகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் இசை நாடகங்களை மேடையேற்ற முடிந்தது. மேலும், நேர்த்திக்காக இசை நாடகங் களை மேடையேற்றுகின்றபோது அவை தெய்வத்துக்கான நிவேதனம் என்ற எண்ணமுமே சாதி இறுக்கத்தில் தளர்வுகளை ஏற்படுத்தி உயர் சாதியினரின் கோயில்களில் ஒடுக்கப்பட்ட மக்களும் நாடகங்களில் நடிக்க முடிந்தது. இவ்வாறான பொருத்தமான சமூகச் சூழல் அமைந்தமை எஸ்.தம்பிஐயா அவர்களும் இசை நாடகங்களினூடாக தமது திறமைகளை வெளிப்படுத்து வதற்கு ஏதுவாக அமைந்து, அவர் தமது ஆளுமையைக் கட்டி எழுப்புவதற்குத் துணை செய்துள்ளது எனலாம்.

## கலாசாரப்பின்னணி

ஒரு சமூகத்தினரின் நம்பிக்கைகளும் விழுமியங்களும் வழக்காறு களும் அச்சமூகத்தின் கலாசாரத்தைத் தீர்மானிக்கின்றன என்பர். வடமராட்சி யில் நாட்டார் கலைகளுக்கு அளிக்கப்பட்ட மதிப்பு அக்கலைகளை வளர்த் தெடுக்க அனுகூலமாயிற்று. கலைகளிடத்து மிகுந்த ஈர்ப்புள்ளவர்களாக வடமராட்சி மக்கள் காணப்பட்டனர். அத்தோடு, கலைகள் காரணமாக மக்கள்

ஒன்றிணையும் தன்மையும் கூட வடமராட்சியில் கூடுதலாகவே காணப்பட்டது. வடமராட்சியின் கிராமியச் சூழலும் சமய அனுட்டானங்களும் வழிபாட்டு முறைகளும் கூட, நாட்டார் கலைகள் வளர்ச்சி பெறுவதற்கு அனுகூலமாகவே இருந்தன. கூத்துக் கலைஞர்களை இழிவாகப் பார்க்கும் நிலைக்குப் பதிலாக, இசைநாடகக் கலைஞர்களை அறிவாளர்களாகக் கொள்ளும் நிலையே வடமராட்சியில் காணப்பட்டது. இசைநாடகங்களில் அண்ணாவி யாராக விளங்கியோரை "மாஸ்ரர்" என்றே மக்கள் அழைத்தனர். எஸ்.தம்பி ஐயா அவர்களும் மாஸ்ரர் என்றே பலராலும் அழைக்கப்பட்டார்.

இப்பண்பாட்டுச் சூழலில் சங்கரதாஸ் சுவாமி பாணியிலான இசை நாடகங்களை மேடையேற்றுவதற்கான சமூக ஒருமைப்பட்ட ஒரு பயில்களம் தாழ்த்தப்பட்டோர் நிலையிலேயே காணப்பட்டது. பார்வையாளர் நிலையில் சாதிபேதமின்றி யாழ்ப்பாணத்துத் தமிழ்மக்கள் நாடகங்களைப் பார்வை யிட்டனர். சிறந்த கலைஞர்களைப் பாராட்டவும் செய்தனர். முக்கியமாக, ஓரிடத்திலே இசைநாடகம் மேடையேறும் போது, அவ்வூர் மணியகாரன் அல்லது சமூக அந்தஸ்து உள்ளோர் மேடைகளில் தோன்றி அண்ணாவியா ரையும் முக்கிய பாத்திரங்களில் நடித்தவர்களையும் பகிரங்கமாகவே பாராட்டினர். இப் பாராட்டுகளும் கூட தமது இசைநாடகங்களுக்கு அநேக தடவைகள் கிடைத்ததாக எஸ்.தம்பிஜயா அவர்கள் குறிப்பிடுவார்.

இசை நாடகக்கலைஞர்கள் அறிவார்ந்த நிலையில் மேடைகளில் தாம் தாங்கிய பாத்திரங்களினூடாக கல்வியறிவூட்டலின் சில முக்கிய கடமைகளை நிறைவேற்றவும் செய்தனர். இலக்கியப்பரிச்சயமும் தமிழ் அறிவும் எஸ்.தம்பிஜயா போன்ற கலைஞர்களுக்கு உத்வேகத்தை வழங்கி, மேடைகளில் சம்வாதங்களை மேற்கொள்வதற்கு உறுதுணையாக விளங்கின. வடமராட்சியின் கலை மலிந்த சூழலில், வடமராட்சியின் இசைநாடகக் கலைஞர்களை முதன்மையாளர்களாகக் கொள்ளும் வடமராட்சியின் கலாசாரப் பின்னணி எஸ்.தம்பிஜயா போன்ற இசைநாடகக் கலைஞர்களின் ஆளுமையை வளர்ப்பதற்குத் துணை நின்றது எனலாம்.

## தனியாள்சார் ஆற்றல்கள்

அண்ணாவியார் எஸ்.தம்பிஜயா அவர்கள் சமூகநிலைப்பட்டதும் தனியாள் சார்ந்ததுமான சவால்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர் கொள்ளக்கூடிய துணிச்சல் மிக்கவராக விளங்கியமை அவரின் ஆளுமை உருவாக்கத்திற்கு அனுசரணையாகவே இருந்தது.

1943 மார்கழியில் அல்வாய் சாமணந்தறைப் பிள்ளையார் பரிபாலன சபை நிறுவப்பட்டு ஒரு சில மாதங்களிலேயே அச்சபையின் தலைவர் இறந்துவிட, தெய்வ குற்றம் காரணமாகவே இச்சம்பவம் நிகழ்ந்ததாக ஊர் மக்கள் நம்பிக்கொண்டு அச்சங்காரணமாக தலைமைப்பதவியை ஏற்க முன் வராதபோது, தமது இருபத்தேழாவது வயதிலேயே எஸ்.தம்பிஐயா அவர்கள் துணிகரமாக அத்தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டார். தமது பதவிக்காலத்தில் (1944 - 1945) நிர்வாகம் சீராக நடைபெற வழிகாட்டி, மக்களை ஒன்றிணைத்தார். எமது கிராம மக்கள் சிவராத்திரரி விரதம் அனுட்டித்து வருகின்றமையால் சிவராத்திரி தினத்தன்று வருடந்தோறும் புராண இதிகாச நாடகங்களை மேடையேற்றி வரவேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்து, சபையின் அங்கீகாரமும் பெற்றார். நாடகங் களை மேடையேற்றும் பொறுப்பை பொதுச்சபை எஸ்.தம்பிஐயா அவர்களுக்கு வழங்கியது.

நீண்ட காலம் சிவராத்திரி நாடக மேடையேற்றம் அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா அவர்களின் பொறுப்பிலேயே இருந்து வந்தது. அல்வாய் மனோகரா கான நாடக சபா என்ற பெயருடன் இந்நாடகங்கள் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டன. சிவராத்திரிக்கு எமது ஆலயத்தில் நாடகங்களை மேடையேற்றும் வழமை இன்றும் தொடர்கின்றது.

எஸ்.தம்பிஐயா அவர்கள் சிறந்த ஆளுமையை உருவாக்கிக் கொள்வதற்கு அவர் பார்த்த தொழிலும் முக்கிய காரணியாக அமைந்தது. சோதிடப்பரம்பரையில் வந்த இவர் சைவப்புலவர் சி.வல்லிபுரம், கவிஞர் மு.செல்லையா ஆகியோரிடம் சோதிடக் கலையைக் கற்றுத்தேர்ந்தார். இடையே தமிழகத்திற்குச் சென்று அங்கும் ஆறுமாத காலம் சோதிடக் கலையைக் கற்றார்.

சோதிடம் அவருக்கான ஜீவனோபாயத் தொழிலாக இருந்த போதிலும், மக்கள் வாழ்வை நெறிப்படுத்தும் வகையில் எதிர்காலப் பலன்களுக்கு இசைவாக மக்களுக்கு ஆலோசனை கூறி ஆற்றுப்படுத்தும் செயலையே அத்தொழிலினூடாக அவர் மேற்கொண்டார். கைரேகை பார்த்துப் பலன் சொல்வதிலும் சாதகம் பார்ப்பதிலும் மனையடி சாஸ்திரத்தி லும் சிறந்து விளங்கினார். ஒருவரின் தொழில் ஸ்தானம் பற்றித்தீர்க்கமாகச் சொல்வதில் வல்லவரான இவர் பலருக்கு தொழில் ஸ்தானப் பலன்களைக் கூறும்போது, அவை நிறைவேறுமா என்பது குறித்துப் பலரிடமிருந்தான சவால்களையும் எதிர்கொண்டார். வடமராட்சியிலும் பிற இடங்களிலும்

ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளைக் கட்டுவதற்கான நிலையங்களைக் குறித்துக் கொடுத்த வகையிலும் எஸ்.தம்பிஐயாவின் பெயரைப் பலரும் அறிவர். சோதிடம் பார்க்கும் போது பிறரைக்கவரக்கூடிய வகையில் பிறருடன் ஒத்துணர்வு (empathy) பூண்டு அவர்களுக்கு விளங்கக்கூடியதான மொழிப்பிரயோகத்தையும் அவர் மேற்கொண்டார்.

எஸ்.தம்பிஐயா அவர்கள் தொழிற்பலன் கூறி கல்வியில் ஊக்குவித்த பலர், பின்பு தொழில் ஸ்தானங்களில் நல்ல நிலை அடைந்தபோது, அவரை நன்றியுடன் பல சந்தர்ப்பங்களில் நினைவு கூர்ந்துள்ளனர். அல்வாய் குமிழடியைச் சேர்ந்த பிரபல வைத்தியர் க.வேலும்மயிலு, கட்டைவேலியைச் சேர்ந்த நியாய துரந்தரர் திலகர் அவர்கள், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள், பேராதனையில் மருத்துவ விரிவுரையாளர் ஸ்ரீதரன் அவர்கள், கலாநிதி ஆனந்தநாதன் ஆகியோர் இவர்களுட் சிலராவர். படிப்பைக் குழப்பிக் கொண்டிருந்த தன்னை தனது தாயார் சோதிடர் எஸ்.தம்பிஐயா அவர்களிடம் கூட்டிச்சென்று சாதகம் பார்த்த போது, அவரின் அறிவுரைப்படி ஆயுர்வேதப் படிப்பை மேற்கொண்டு தான் இந்த நிலையில் இருப்பதாக, பாரதிதாசன் சனசமூக நிலையத்தினால் எடுக்கப்பட்ட வைத்தியர் வேலும்மயிலு அவர்களுக்கான பாராட்டு விழாவின் போது, வைத்தியர் வேலும்மயிலு அவர்கள் சோதிடர் எஸ்.தம்பிஐயா அவர்களுக்கு மேடையில் பகிரங்கமாக நன்றி செலுத்தினார். பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் வடமராட்சி மேடைகளில் சோதிடர் எஸ்.தம்பிஐயா பற்றி குறிப்பிடத்தவறுவ தில்லை. நியாயதுரந்தரர் திலகர் அவர்கள் ஊருக்கு வருகின்ற போது, சோதிடர் எஸ்.தம்பிஐயா அவர்களைப் பார்த்துச் செல்லத் தவறுவதில்லை.

இவ்வாறாக, மதிப்பு மிக்கோருடனான தொடர்புகளும் அண்ணாவி யார் எஸ்.தம்பிஐயா அவர்களின் ஆளுமை உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

இசை நாடகங்களைப் பழக்கிய வகையில் மாத்திரமன்றி, நாடகாசிரியராகவும் விளங்கிய வகையில் இலக்கண, இலக்கியப் புலமையையும் கவி புனையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டபோது, பல்வேறு இலக்கியங்களைக் கற்று, சமரகவி புனைவ தனூடாகவும் ஆலயங்கள் மீதான கீர்த்தனைப் பாடல்களை எழுதுவத னூடாகவும் நாடகங்களுக்கான பாடல்களை இயற்றுவதனூடாகவும் தமது கவித்துவத்தை எஸ்.தம்பிஐயா அவர்கள் வளர்த்துக் கொண்டார். இவரது நாடகப் பிரதிகள் எவையும் அச்சில் வராமையால், இவர் எழுதிய பாடல்களும்

விருத்தங்களும் பிற கலைஞர்களால் வெவ்வேறு நாடகங்களில் பாடப்பட்டன. அவ்வாறு பல நாடகக்குழுவினராலும் பாடப்பட்டு வந்த ஒரு பாடல் "நாராயணா நரபூஷணா" என்பதாகும்.

இசைநாடகப் பாடல்களின் பயில்பு வழமையான மெட்டுகளினூடான பயில்வாகவே இருந்துவந்தது. சங்கரதாஸ் சுவாமிகள் பாணி நாடகப்பாடல் களை ஈழத்துக் கலைஞர்களும் பயில்வதற்கு இம்மெட்டுகளே பெரிதும் உதவின. வரன்முறையான சங்கீதம் தெரியாதவர்களும் இசைநாடகப் பாடல்களைப் பாடுவதற்கு சங்கரதாஸ் சுவாமிகள் வழிகாட்டினார். ஆயினும், இசைநாடக அண்ணாவியாராகவும் நாடகாசிரியராகவும் விளங்குவதற்கு வரன்முறையான சங்கீத அறிவும் அவசியம் என்பதை உணர்ந்த எஸ்.தம்பிஐயா அவர்கள் கர்நாடக சங்கீதத்தை முறையாகப் பயின்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசானான துரைசாமி ஐயர் யாழ்ப்பாணத்துக்கு வந்து தங்கியிருந்தபோது, அவரிடத்தில் தொடர்ச்சியாக ஆறுமாதகாலம் எஸ்.தம்பிஐயா அவர்கள் சங்கீதப் பயிற்சி பெற்றார். அவருடன் கூடவே எம்.பி.அண்ணாசாமி ஆசிரியர், வே.பாலசிங்கம், பாஷையூர் அல்வின் மாஸ்ரர் ஆகியோரும் சங்கீதம் கற்றனர்.

இவை தவிர, இசைநாடக மரபு "ஸ்பெஷல்" நாடக மரபாக மாற்றம் பெற்றபோது, அந்நாடகங்களில் இடம்பெற்ற தர்க்கங்களில் தம்மைவிட்டுக் கொடுக்காது, தமது அறிவாற்றலைப் பயன்படுத்தி, பலரையும் மிஞ்சும் வகையில் முன்னணியில் திகழ்ந்தமையும் எஸ்.தம்பிஐயா அவர்களின் ஆளுமை விருத்தியை ஏற்படுத்தியது எனலாம். சோதிடம் காரணமாகவும் நாடகாசிரியர் என்ற காரணத்தினாலும் பிறருடன் ஏற்பட்ட தொடர்புகள் எஸ்.தம்பிஐயாவுக்கான சமூக அங்கீகாரத்தை வழங்கி, உற்சாகத்துடன் இசைநாடகத் தயாரிப்பு முயற்சிகளில் அவர் தொடர்ந்தும் ஈடுபடுவதற்கு உறுதுணையாயின. 1960களின் நடுக்கூறில் தினகரன் பத்திரிகை நிறுவனம் யாழ்ப்பாணத்தில் "தினகரன் நாடக விழாவை" ஏற்பாடு செய்த போது அவ் விழாவில் அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா அவர்கள் அண்ணாவியாருக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈழத்து இசைநாடக வரலாற்றில் எஸ்.தம்பிஐயாவின் பங்களிப்பு

ஈழத்து இசை நாடக உலகில் அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா அவர்களின் முக்கியமான பங்களிப்புகளை பின்வருமாறு பட்டியலிடலாலம்.:

1. 1940களிலேயே அல்வாய் மனோகர கானநாடக சபாவின் நாடகாசிரியராகவும் அண்ணாவியாராகவும் விளங்கி, இசைநாட மரபை வடமராட்சியில் நிறுவ உழைத்ததோடு பலமுன்னணி நடிகர்களின் உருவாக்கத்திலும் பங்களிப்புச் செய்தமை
2. நேர்த்திக்காக இசைநாடகங்களை மேடையேற்றும் மரபை வளர்க்கத் துணை நின்றமை
3. இசைநாடக அரங்கின் பல்வேறு வகிபாகங்களை சிறப்புற நிறைவேற்றியமை
4. ஈழத்தில் ஸ்பெஷல் நாடகமரபை திசைகெட்டுப்போகாமல் நெறிப்படுத்த விழைந்தமை.

**இசைநாடக மரபை நிறுவ உதவியமையும் முன்னணிக் கலைஞர்களின் உருவாக்கத்தில் பங்களிப்புச் செய்தமையும்.**

வடமராட்சியில் சங்கரதாஸ் சுவாமிகள் பாணி இசைநாடகங்களைத் தயாரித்து அளித்தமையாலும் பல்வேறு நடிகர்களுக்குப் பயிற்சி அளித்த வகையிலும் அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா அவர்களுக்கு வடமராட்சியின் இசைநாடக வரலாற்றில் முக்கிய பங்குண்டு. இவ்வகையில் இவரின் பங்களிப்புகளை சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

1. தேவரையாளிச் சைவவித்தியாசாலையின் தலைமை ஆசிரியர் மு.செல்லையா அவர்கள் எழுதிய சாந்தசக்குபாய், மோகினி ருக்குமாங்கதா ஆகிய நாடகங்களையும் ஆசிரியர் க.முருகேசு அவர்கள் எழுதிய மதிவதனா - சத்தியசீலன் நாடகத்தையும் எஸ்.தம்பிஐயா அவர்கள் நெறிப்படுத்தியிருந்தார்; அந்நாடகங்களில் முக்கியமான பாத்திரங்களையும் ஏற்றிருந்தார்.
2. அல்வாய் மனோகர கான நாடக சபாவின் இயக்குநராக விளங்கி பல நாடகங்களைத் தயாரித்தளித்து, பல முன்னணிக் கலைஞர் களையும் உருவாக்கினார். இம் மன்றத்தின் முதலாவது நாடகமாக “சத்தியசீலன்” என்ற நாடகத்தைத் தாமே எழுதி, அல்வாயூர் நடிகர்களைப் பயிற்றி மேடையேற்றினார். இரண்டாவதாக, “சதி அகல்யா” எனும் நாடகத்தை எழுதித்தயாரித்து, அயலூரிலுள்ளவர் களையும் சேர்த்து இந்நாடகத்தில் நடிக்கச் செய்தார். வடமராட்சி யிலும் வேறிடங்களிலும் பல மேடைகளைக் கண்ட இந்நாடகம்,

திருகோணமலையில் கணேசன் தியேட்டரின் முன்னால் கட்டண முறையில் நடத்தப்படுவதற்கு ஒப்பந்தமானது. தென்னகத்து அறுபத்து மூன்று பாலியர் நாடகசபாவினரின் “கிருஷ்ணலீலா“ மேடையேறி ஒரு கிழமையின் பின் அதே மேடையில் “சதி அகல்யா” மேடையேறியபோது, இதில் நடித்த பாலசிங்கம், திரவியம் ஆகியோரின் நடிப்பு கிருஷ்ணலீலாவில் நடித்த மாஸ்டர் மகா லிங்கத்தின் நடிப்போடு ஒப்பிட்டுப்பேசப்பட்டது. இந்நாடகத்தில் அகலிகையின் தோழியாக நடித்த வி.கே.இரத்தினம் இந்நாடகத்தின் மூலமே பிரபல்யமடைந்து பின்னாளில் “சந்திரமதி இரத்தினமாக” புகழ் பெற்றார்.

3. வடமராட்சி சமூக சேவா சங்கத்தின் ஆதரவில் யாழ் நகர மண்டபத்தில் ஐந்து கிராமங்களைச் சேர்ந்தவர்களின் ஐந்து நாடகங்கள் மேடையேற்றப்பட்டபோது, அண்ணாவியார் எஸ்.தம்பி ஐயா அவர்களால் தயாரித்தளிக்கப்பட்ட “பக்த துருவன்” நாடகம் பெரும் வரவேற்பைப் பெற்றது.

4. ஒட்டுசுட்டானில் தொழில் பார்த்துவந்த எஸ்.தம்பிஐயா அவர்களின் தந்தையாரான சபாபதி அவர்கள் ஒரு நேர்த்திக்காக தான் தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தில் தனது மகனைக்கொண்டு நாடகமொன்றை மேடையேற்ற விரும்பினார். இதற்காக வி.வைரமுத்து உட்பட ஐவரை அழைத்து இரண்டு நாள் பயிற்சி கொடுத்து, தானும் உட்பட அறுவரை மட்டும் கொண்டு, “சம்பூர்ண அரிச்சந்தி”ர“ நாடகம் அவரால் மேடையேற்றப்பட்டது. முன. அரிச்சந்திரனாக எஸ்.தம்பி ஐயா, முன் சந்திரமதியாக வி.வி.வைரமுத்து, பின் அரிச்சந்திரனாக வி.வி.வைரமுத்து பின் சந்திரமதியாக எஸ்.தம்பிஐயா என்ற முறையில் பாத்திரமேற்று, முழுஇரவு நாடகமொன்றை எவ்வளவு சிக்கனமாகத் தயாரிக்க முடியுமென்பதை எஸ்.தம்பிஐயா அவர்கள் எடுத்துக் காட்டினார். இதன் பின்பு எஸ்.தம்பிஐயா அவர்களும் வி.வி.வைரமுத்து அவர்களும் அரிச்சந்திரன் - சந்திரமதி பாத்திரங் களேற்று இணைந்து நடித்த அரிச்சந்திரா நாடகம்பல்வேறு இடங்களிலும் மேடையேற்றப்பட்டது. இதேபோல இவர்கள் இரு வரும் இணைந்து நடித்த சத்தியவான் - சாவித்திரி, கோவலன் - கண்ணகி ஆகிய நாடகங்களும் பல்வேறு இடங்களிலும் மேடையேறின.

5. அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா அவர்களின் நாடகங்களில் பயிற்சி பெற்று நடித்த நடிகர்களில் முக்கியமானவர்கள்: நடிகமணி வி.வி.வைரமுத்து, அரியாலை கவிஞர் வே.ஐயாத்துரை, வி.கே.இரத்தினம், என்.கிருஷ்ணபிள்ளை, எஸ்.கந்தவனம், எம்.கனகசிங்கம், பி.சபாரத்தினம், தி.விருத்தாசலம், வே.பால சிங்கம், துன்னாலை எஸ்.சோமசுந்தரம், வதிரி என்.திரவியம், வீ.சிவலிங்கம், த.ஐயாத்துரை, எம்முருகேசன் நெல்லியடி அ.பர்ணாந்து, த.வீரசிங்கம், க.சின்னத்துரை சி.ப.இராசரத்தினம், இ.சிவபாதம்

6. எஸ்.தம்பிஐயா அவர்கள் அண்ணாவியம் செய்த நாடகங்களில் நடித்த இளையவர்கள்: தர்மவதி சபாரத்தினம், தவமலர் துரைராஜா, அழகேஸ்வரிகமலநாதன், மதுரைத்தேவி ஜெயராஜா, சிவமலர் தங்கவேல், சாரதாவதி விஜயநாதன், பர்வதாணி வன்னிய குலம், சிவனேஸ்வரி செல்வராசா, சந்திரா சிவதாசன், கலாவதி தர்மரத்தினம், கீதாமணி கமலேந்திரன், கமலா சின்னராஜா, மகேந்திரமலர், செ.விவேகானந்தன், மா.அழகானந்தன், மா.அம்பிகைபாகன், மா.அனந்தராசன், மா.செல்லத்தம்பி, க.அரசரத்தினம், த.கலாமணி, க.நவசிவாயம், க.நவரத்தினம் (நவம்) மற்றும் பலர்.

7. அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா அவர்கள் தயாரித்து அண்ணாவியம் செய்த பல்வேறு நாடகங்களினதும் “பழக்கம்” அவரது வீட்டு முற்றத்திலேயே குறைந்தது மூன்று மாதங்களுக்குக் குறையாமல் இடம் பெறும். பயிற்சி முடிவில், “வெள்ளுடுப்பு” மேடையேற்றம் இம்முற்றத்திலேயே இடம்பெறும். அதன் பின்பே இந்நாடகங்கள் உரிய இடங்களில் மேடையேறும்.

**நேர்த்திக்காக இசைநாடகங்களை மேடையேற்றும்**

**மரபைப் பேணத் துணை நின்றமை.**

நாடகம் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தவை சமயச் சடங்குகளே என உலக நாடகவரலாறு கூறும். சிலப்பதிகாரத்தில், கொற்றவைத் தெய்வத்திற்கு மடையுடன் கூத்தும் நிவேனதப் பொருளாகப் படைக்கப்பட்ட செய்தி உண்டு. இதன் தொடர்ச்சியாகவே மக்கள் தாம் நினைத்த கருமங்களில் வெற்றி பெறுவதற்கும் கடும் நோயினின்று நீங்கு

வதற்கும் கூத்தாடுவதாக நேருகின்ற வழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டுமென பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் குறிப்பிடுவார்.

இன்றும் ஈழத்தில் பல ஆலயங்களிலும் வழிபாட்டின் ஓர் அம்சமாக கூத்தும் இசை நாடகமும் தொடர்புபட்டிருப்பதைக் காணகூடியதாக உள்ளது. குறிப்பாக, வழிபாட்டு நேர்த்திக்கடனுக்காக கூத்துப் போடுவிக்கும் முறை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இன்றும் தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றது. இவ்வகையில் நெல்லண்டைப்பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நேர்த்திக்காகப் போடுவிக்கப்பட்ட நாடகங்கள் அண்ணாவியார் எஸ்.தம்பிஜயா அவர்கள் தயாரித்து மேடையேற்றியுள்ள நாடகங்களாகும். சிவராத்திரி நாளில் நாடகம் போடும் மரபை அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிலில் எஸ்.தம்பிஜயா அவர்களே ஆரம்பித்து வைத்தார். அவ்வழக்கம் இன்றும் தொடர்கின்றது. இம்மேடைகளில் அவர் தயாரித்தளித்த நாடகங்களே அதிகமாக மேடையேறின. வடமராட்சியில் நாடகங்களை மேடையேற்றும் வழமை கொண்ட ஆலயங்களாக மாதனை கண்ணகை அம்மன் கோயில், புற்றளைப் பிள்ளையார் கோயில், கற்கோவளம் கும்மி அம்பாள் கோயில், அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோயில், தும்பளை சக்தி கோயில், வதிரி உல்லியனொல்லை முத்துமாரி அம்மன் கோயில், வதிரி பூவற்கரைப் பிள்ளையார் கோயில் ஆகியனவும் அடங்கும். இந்த ஆலயங்கள் பலவற்றிலும் எஸ்.தம்பிஜயா அவர்களின் நாடகங்கள் மேடையேறியுள்ளன.

இன்று பிரதேச செயலகங்கள் ஆண்டு தோறும் தமது பிரதேசத்தைச் சேர்ந்த மரபுவழிக்கலைஞர்களைக் கௌரவித்து வருகின்றன. இவ்வாறு கௌரவம் பெறும் வடமராட்சிக் கலைஞர்களிற் பலர் சிறுவர்களாகவும் இளைஞர்களாகவும் இருந்த காலத்தில் எஸ்.தம்பிஜயா அவர்களிடம் பயிற்சி பெற்றவர்களே.

இதேவேளை, பிள்ளைப்பேறு, நோய் நீக்கம், வழக்கு வெற்றி, பரீட்சைச் சித்தி என்பவற்றுக்காக வைக்கப்பட்ட நேர்த்திகளின் வரிசையில், இன்று வெளிநாட்டுப் பயணம் சித்திப்பதற்கும் நேர்த்திவைத்து நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் கூத்து அல்லது இசை நாடகம் போடுவிக்கும் வழமை தொடர்கிறது. இந்நேர்த்திகளுக்காக கூத்து, இசைநாடகம் ஆகிய விரும்பப்படுவதற்கு, இந்நாடக வகைகளே அம்பாளுக்கு உவப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையே காரணமாகும். இத்தகையதொரு நம்பிக்கையின் தொடர்ச்சியில் இசைநாடகங்களைத்

தொடர்ந்தும் பேணி வரும் கலைஞர் கூட்டத்தினரை உருவாக்கி, மக்கள் வாழ்வில் தெய்வ நம்பிக்கையினூடாக உளச் சீர்மியம் பெற வழி வகுத்தவர்களுள் முக்கியமான ஒருவர் என்ற வகையிலும் ஈழத்து இசை நாடக வரலாற்றில் அண்ணாவியர் எஸ்.தம்பிஐயாவுக்கு முக்கிய இடமொன்று உள்ளது.

**அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா அவர்களின்**

**இசைநாடக அரங்க வகிபாகங்கள்**

அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா அவர்கள் ஈழத்து இசைநாடக உலகில் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக நின்று நிலைத்து, இசைநாடக அரங்கின் பல்வேறு வகிபாகங்களை வகித்து வந்தவர். நடிகராக, அண்ணாவியாராக, நாடகாசிரியராக, பாடலாசிரியராக, ஒப்பனையாளராக என முக்கியமான வகிபாகங்களை அவர் வகித்து வந்தார்.

**1. நடிகர்**

சிறுவயதில் நடித்த நாடகங்களைத் தவிர்த்து, பின் அவர் நடிகராக ஏற்றுக் கொண்ட கதாபாத்திரங்களைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

**ஆண்பாத்திரங்களாக:**

அரிச்சந்திரா  அரிச்சந்திரன்

சத்தியவான் - சாவித்திரி  சத்யவான்

பக்தநந்தனார் - நந்தன், வேதியர்

மகாகவி காளிதாஸ் - போஜராஜன்

பவளக்கொடி -  கிருஷ்ணன்

அல்லி அர்ச்சுனா - கிருஷ்ணன்

சத்தியசீலன் - சத்தியசீலன்

சீதா கல்யாணம் - விஸ்வாமித்திரர்

சதி அநுசுயா - சிவன்

அர்ச்சுனன் தபசு - சிவன்

மோகனி ருக்குமாங்கதன் - ருக்குமாங்கதன்

பபக்த துருவன் -உத்தான பாதன்

சீமந்தினி - யமன்

மார்க்கண்டேயர் - யமன்

கண்ணப்பநாயனார் - யமன்

சாரங்கதரா - சுமந்திரன்

பல்வேறு நாடகங்கள் - நாரதர்

**பெண் பாத்திரங்களாக:**

அரிச்சந்திரா - சந்திரமதி

சத்தியவான் சாவித்திரி - சாவித்திரி

நல்ல தங்காள் - நல்ல தங்காள்

கோவலன் கண்ணகி - கண்ணகி

ஞானசௌந்தரி - ஞானசௌந்தரி

ஔவையார் - ஔவையார்

அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா ஏற்று நடித்த பாத்திரங்கள் பெரும்பாலும் சோகமயமானவை. சோக ரஸம் ததும்பும் பாத்திரங்களில் அவரின் தத்ரூபமான நடிப்பே ரசிகர்களைப் பிணைத்து வைத்திருந்தது. இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மேடைகளில் நடித்தவர் என்ற பெருமையும் இவருக்குரியது.

**2. அண்ணாவியார்**

நடிகர்களுக்கு ஒழுங்கான பயிற்சியும் கட்டுப்பாடும் அவசியமானது என சங்கரதாஸ் சுவாமிகள் உறுதியாக நின்றது போலவே, ஈழத்தில் எஸ்.தம்பிஐயா அவர்களும் ஒழுக்கம், பயிற்சி, கட்டுப்பாடு என்பவற்றில் கொள்கைப் பற்றுடையவராக இருந்தார். 1940 களில் ஆரம்பிக்கப்பட்ட அல்வாய் மனோகர கான நாடக சபாவின் அண்ணாவியாராகி பல்வேறு நாடகங்களை இவர் அண்ணாவியம் செய்து தயாரித்தளித்தார். பல்வேறு ஊர்களுக்கும் சென்று அவ்வூரிலுள்ளவர்களையும் பயிற்றி, நாடகங்களை அவர்களைக் கொண்டு மேடையேற்றினார்.

அவர் நாடகங்களைப் பழக்கிய இடங்களுள் வரணி, பளை, புற்றளை,

மாதகல், முல்லைத்தீவு என்பன அடங்கும். ஈழத்தின் பல்வேறு பாகங்களிலும் உள்ள ஆலயங்களிலும் பொதுமேடைகளிலும் இவரது நாடகங்கள் மேடையேறின. அல்வாய், அல்வாய் வடக்கு, சந்தா தோட்டம், புற்றளை, தும்பளை, வதிரி, பளை, கிளிநொச்சி, ஒட்டு சுட்டான், முள்ளியவளை, பரந்தன், முல்லைத்தீவு, திருகோணமலை, திக்கம், நெல்லியடி மகாத்மா தியேட்டர், யாழ்.நகர மண்டபம், புனித பத்திரிசியார் கல்லூரி அரங்கம், கோண்டாவில், மல்லாகம், கரவெட்டி, துன்னாலை ஆகியன எஸ்.தம்பிஐயா அவர்களின் நாடகங்கள் மேடையேறிய இடங்களுள் முக்கியமானவை.

**3. நாடகாசிரியர்**

ஈழத்து இசைநாடக உலகில் அண்ணாவியார் எஸ்.தம்பிஐயாவுக்கான சிறப்பான இடம் அவர் தலைசிறந்த ஒரு நாடகாசிரியர் என்பதே. இலக்கிய நயம் வாய்ந்த உரையாடல்களும் சந்தம் மிக்க பாடல்களும் இவரின் நாடகப் பிரதிகளில் விரவியிருக்கும். ஓரிரவிலேயே ஒரு முழுநாடகப் பிரதியை எழுதி முடிக்கும் வல்லபம் கொண்டவராக அவர் விளங்கினார். இவர் எழுதிய நாடகப் பிரதிகளின் பட்டியல் மிக நீண்டதாகும்.

1. சத்தியசீலன்
2. சரோசா
3. அல்லி அர்ச்சுனா
4. பவளக்கொடி
5. சாரங்கதரா
6. கோவலன் - கண்ணகி
7. சத்தியவான் - சாவித்திரி
8. அரிச்சந்திரா
9. பக்த துருவன்
10. பக்த நந்தனார்
11. பாமா விஜயம்
12. நல்லதங்காள்
13. ஞான சௌந்தரி
14. சீதா கல்யாணம்

15. காலவ ரிஷி
16. சதி அநுசூயா
17. மலர்விழி
18. மார்க்கண்டேயர்
19. வள்ளி திருமணம்
20. கண்ணப்ப நாயனார்
21. சீமந்தினி
22. ஔவையார்
23. தாயின் மகிழ்ச்சி
24. கொக்கெனவே நினைத்தாயோ
25. மகாகவி காளிதாஸ்
26. நாம் இருவர்
27. தமயந்தி
28. சகுந்தலை
29. அம்பிகாபதி
30. அருச்சுனன் தபசு
31. அசோக்குமார்
32. வாலிவதை
33. சதி அகல்யா

இப்பட்டியலிலுள்ள இவரது கையெழுத்துப்பிரதிகளிற் பல பரவலாக பல்வேறிடங்களிலும் பயிலப்பட்டன.

அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிலில் சிவராத்திரிக்காக நாடகங்கள் மேடையேறிவந்த போது, பின்னாளில் சமூக நாடகங்களும் மேடையேற்றப்பட்டன. ஒரு சமயம், ஆலய பொதுச்சபை யானது முழு நீள புராண நாடகத்தை மேடையேற்ற வேண்டுமெனத் தீர்மானித்து அப்பொறுப்பை எஸ். தம்பிஜயாவிடம் கையளித்தது. அப்போது முழு இரவுக்குரிய முழு நீள நாடகமாக “சீமந்தினி” எனும் நாடகப் பிரதியை எழுதி, ஊரிலுள்ளவர்களைப் பழக்கி அந்நாடகத்தை அவர் மேடை யேற்றினார்.

**4. பாடலாசிரியர்**

எஸ்.தம்பிஐயா அவர்களின் கவித்துவப் புலமை அவர் எழுதிய நாடகப் பாடல்களில் வெளிப்பட்டது. பொருத்தமான ராகங்களில் பாடல்களை சந்தப்பாடல்களாக அவர் எழுதினார். இப்பாடல்களுட் பலவும் பிற நடிகர்களால், இவருடைய பாடல்கள் என்று அறியாத நிலையிலேயே பாடப்பட்டு வந்தன.

**5. ஒப்பனைக் கலைஞர்**

பாடசாலைக் காலத்திலேயே சித்திரம் வரைவதில் எஸ்.தம்பிஐயா ஆர்வம் கொண்டிருந்தார். பின்னாளில், அல்வாய் மனோகர கான நாடக சபாவுக்கான ஸீன்களை இவரே வரைந்து, ஒப்பனைக்கான மணி ஆடைகளையும் தயாரித்தார். தாம் நடிக்கும் நாடகங்களில் பிற நடிகர்களுக்கு ஒப்பனை செய்யும் பணியையும் அவர் மேற் கொண்டார். தமக்குத் தாமே ஒப்பனை செய்வார். நாடக மடுவத்தில் வைத்தே றேசர் இல்லாமல் ஒரு பிளேட்டை வைத்துக் கொண்டு தமக்குத் தாமே சவரம் செய்யும் ஆற்றலையும் பெற்றிருந்தார். எம்.பி அண்ணாசாமி ஆசிரியரும் இவரும் இணைந்து ஒரே நாடகக் குழுவாக இயங்கியபோது, இவர்கள் இருவருமே பிற கலைஞர் களுக்கான ஒப்பனைகளைச் செய்தனர். அண்ணாசாமி ஆசிரியரின் “ஸீன் செற்” பிற்காலங்களில் பயன்படுத்தப்பட்டது. வேஷப்பொருத்தத்துடன் ஒன்றாக போட்டியாக நடித்த இவர்கள் இருவரினதும் நாடகங்களுக்குப் பெரும் வரவேற்பிருந்தது.

**ஈழத்தில் ‘ஸ்பெஷல்’ நாடக மரபை நெறிப்படுத்தியமை**

தமிழக இசைநாடகக் குழுக்கள் பல கம்பனிகளாக உருவாகி, தமது இருப்புக்காகப் பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருந்த வேளை உருவானவை “ஸ்பெஷல்” நாடகங்கள் ஆகும். பேர் பெற்ற நடிகர்களை - அவர்கள் வெவ்வேறு கம்பனிகளைச் சேர்ந்தவர்களாயினும் - ஒன்று கூட்டி, பரிச்சயமான நாடகங்களை மேடையேற்றியபோது, இந்நடிகர்கள் அனைவரும் ஸ்பெஷலாக அழைக்கப்பட்டவர்கள் என்ற வகையில் அந்நாடகங்கள் ஸ்பெஷல் நாடகங்கள் என அழைக்கப்பட்டன. இப்பின்னணியில் ஸ்பெஷல் நாடக மேடைகள் பிரபல கலைஞர்களிடையே நிகழும் போட்டிக்கான களங்கள் ஆயின.

தென்னகத்தில் இந்நாடகங்களில், செல்வாக்கு மிகுந்த நடிகர்கள் ஏனைய நடிகர்களை இழித்தும் பழித்தும் பேசி கைதட்டல் பெற முயற்சித்து, கதை அம்சத்திலிருந்து விலகிச் சென்றனர். ஆனால், ஈழத்தில் இந்த ஸ்பெஷல் நாடகமரபில், நடிகர் எஸ்.தம்பிஜயா அவர்கள் இசை நாடக மேடையை அறிவுப்போட்டிக்கான களமாக மாற்றினார். கதையம்சத்தி லிருந்து விலகிச் செல்லாதவகையில், இலக்கிய வாதங்களை மேடையில் நடத்தினார். தனது குழுவைச் சேர்ந்த நடிகர்களையும் இச்சம்வாதங்களில் எவ்வாறு உரையாட வேண்டுமென வழிப்படுத்தினார். அந்நாடங்களில் சிறுபாத்திரங்களில் நடித்து வந்த வி.கே. இரத்தினமும், வே.ஐயாத்துரையும் எஸ்.தம்பிஜயாவின் மறைவின்போது ஸ்பெஷல் நாடக அனுபவங்களை நினைவு கூர்ந்து, “நாடக மேடையிலே நல்ல மொழி சொல்லித்தந்தாய், பாதகமானோர்க்குப் பதிலடியும் போட வைத்தாய்” என்று வி.கே.இரத்தின மும், “போட்டி வெற்றி நாட்டவரும் நாடகத்தில் நல்வசனப்புள்ளி சூட்டி ஈட்டுவையே வெற்றியிதம் இங்கு” என வே.ஐயாத்துரையும் குறிப்பிட்டுள்ளனர்.

எஸ்.தம்பிஜயா சாவித்திரியாக நடித்த வேளைகளில் ஈழத்திலுள்ள பல்வேறு ஸ்பெஷல் நடிகர்கள் அவருடன் போட்டியாக யமன் பாத்திரத்தில் நடித்துள்ளனர். தியலுவில் வேலுப்பிள்ளை, நடிகமணி வி.வி.வைரமுத்து அச்சுவேலி மார்க்கண்டு, வசாவிளான் மார்க்கண்டு, வதிரியூர் பொ. கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் மற்றும் சிலரும் யமனாக நடித்தவர்கள் ஆவர். ஸ்பெஷல் நாடக மேடையில் எஸ்.தம்பிஜயாவை வெற்றிகொள்ள முடியாது என்பதே பலரதும் கருத்தாகும்.

இவ்வாறாக ஈழத்து இசை நாடக அரங்கு ஸ்பெஷல் நாடக அரங்காக மாறிய வேளையிலும் ரசிகர்களுக்கு அறிவூட்டும் வகையில் தர்க்கங்களுக்கு இடமளித்து, அத்தர்க்கங்களை ஆரோக்கியமாக வழிநடத்தியவர் என்ற வகையிலும் அண்ணாவியார் எஸ்.தம்பிஜயா முக்கியத்துவம் பெறுகிறார்.

**நிறைவுரை**

அண்ணாவியார் எஸ்.தம்பிஜயா அவர்களின் கலைப்புலம் பரந்து விரிந்தது. ஈழத்தின் ஏனைய இசைநாடகக் கலைஞர்கள் எவரும் தமது கலைவரலாற்றை தன்வரலாறாக எழுதிக் கொள்ளாத போதும் எஸ்.தம்பிஜயா எழுதிய தன்வரலாறு, பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் எழுதிய “இத்திமரத்தாள்” எனும்

நூலில் அனுபந்தமாக இணைக்கப்பட்டுள்ளது. இவர் பற்றிய ஆய்வு "அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா ஒரு நுண்ணாய்வு நிலை நோக்கு" என்ற தலைப்பில் முதுகலைமாணிப் பட்டத்துக்காக திருமதி குயீன் ஜெஸீலி கலாமணி அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. சோதிடரான எஸ்.தம்பிஐயா நடிகராகவும் "ஸ்பெஷல்" நடிகராகவும் அண்ணாவியாராகவும் நாடக ஆசிரியராகவும் பாடலாசிரியராகவும் சிறப்புற விளங்கிய வகையில் அவரது கலைப்புல வரலாறு முக்கியத்துவம் உடையதாகிறது. அவரின் ஜனனத்தின் பின் நூற்றாறாவது ஆண்டில், அவரது உருவச் சிலை திறக்கப்படும் வேளையில் இவ்வாறானதாக அவரின் கலைப்புலவரலாறு சிறு நூலாக வெளிவருவது அவசியமானதே.

முரசொலியில் 1988.08.16 இல் வெளியான நினைவஞ்சலிக்கட்டுரை

# அல்வாயூர் வழங்கிய கலைஞர் தம்பிஐயா

## - பேராசிரியர் அ.சண்முகதாஸ் -

சென்ற மாதம் 17- ஆம் திகதி அல்வாயூரைச் சேர்ந்த எஸ். தம்பிஐயா அமரரானர். அவர் ஒரு நாடகக் கலைஞர். சங்கீதம் முறையாகப் பயின்றவர்; சோதிடர்; சமூகசேவையாளர். இப்படிப் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டுப் பல பணிகளைச் செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்து மரபுவழி நாடக வரலாற்றிலே திரு.தம்பி ஐயாவுக்கும். இடமுண்டு. அண்மையில் இக்கலைஞர் தொடர்பாக மல்லிகை இதழிலே சில மாதங்கள் தொடர்ந்து நடைபெற்ற இலக்கிய சர்ச்சையினை வாசகர்கள் பலர் அறிவர். இவ்வாறு ஒரு சர்ச்சை நடப்பதற்குக் காரணமாயிருந்தவரெனின் அவருடைய சிறப்பினை ஓரளவு ஊகிக்க முடியும்.

கலைஞர் தம்பிஐயாவினுடைய நாடக வரலாறு, தும்பளை நெல்லண்டைப் பத்திர காளியம்மன் கோயில் முன்றலிலே மேடையேற்றப் பட்ட "மோகினி - ருக்குமாங்கதா" என்னும் நாடகத்திலே தோன்றியதுடன் தொடங்குகின்றது.

இந்நிகழ்வு பற்றிக் கலைஞர் தம்பிஐயா பின்வருமாறு தன்னுடைய கட்டுரையிலே கூறுகிறார்: கவிஞர் மு.செல்லையா அவர்களிடத்து நாடகம், சொல்நயம், கவிநயம், சோதிடம் என்பவற்றையும், அண்ணாமலை சர்வ கலாசாலைப் பேராசானான துரைசாமி அய்யரிடத்து அண்ணாசாமி ஆசிரியர் வி.பாலசிங்கம், அல்வின் மாஸ்றர் என்பவர்களோடு சேர்ந்து சங்கீதத்தையும் கற்று, இவ்வாறெல்லாம் நாடகவுலகில் நான் விளங்க முடிந்தமைக்கு "மோகினி-உருக்குமாங்கதா" வில் மேடையேறி நெல்லண்டைப் பதியுறை பத்திரகாளி அம்மையின் திருவருள் பெற்றமையே காரணமென்று நான் இன்றும் எண்ணி வருகின்றேன்." இவ்வாறு தன் நாடக வாழ்வைத் தொடங்கிய அவர் பல பிரபல நடிகர்களுடன் சேர்ந்து நடிக்கும் வாய்ப்புப் பெற்றார். இன்று

நாடக மேடைகளிலே தனி நடிகனுடைய கற்பனைக்கும் ஆக்கத்திறனுக்கும் இடமில்லாமலே போய்க் கொண்டிருக்கின்றது. தேகப்பயிற்சிகள்தான் அதிகரிக்கின்றன. ஆனால் அக்காலத்தில் நாடக மேடையிலேயே நடிகர்களுக்குள் போட்டி இடம் பெற்றது. கற்பனைக்கும் நுண்ணறிவுக்கும், சமயோசித புத்திக்கும் அங்கு வாய்ப்பிருந்தன. அவை பாத்திரத்தின் குண நலன்களைப் பாதிக்கா வண்ணமும் பார்வையாளர்களின் பரவசத்தைக் கூட்டுவனவாக அமைந்தன. இந்த வகையிலே, நடிகமணி வி.வி. வைரமுத்துவும் கலைஞர் தம்பியையாவும் போட்டி நாடகங்களிலே நடித்து பலரின் பாராட்டுதல்களையும் பெற்றனர்.

இவர் பங்கு கொண்ட நாடகங்களுள் அரிச்சந்திரா, சத்தியவான் - சாவித்திரி, கோவலன் - கண்ணகி, ஞானசவுந்தரி, பவளக்கொடி, அல்லி-அருச்சுனா, நல்லதங்காள், ஸ்ரீவள்ளி, பக்ததுருவன் சதிஅனுசூயா, பக்தநந்தனார், காலவரிஷி, பக்தமார்க்கண்டேயா, ஔவையார், சீமந்தினி, காளிதாசன், சாரங்கதாரா, சத்தியசீலன், அசோக்குமார், பராசக்தி, நாமிருவர், வீரகுமாரன், பதவிமோகம், நச்சுக்கோப்பை, சாந்தசக்குபாய், மோகினி உருக்குமாங்கதா, மதிவதனா - சத்தியசீலன் என்பன முக்கியமானவையாகும். இவ் வேளையிலே அவருடன் நடித்த நாடகக் கலைஞர்களையும் நினைவு கூர்தல் பொருத்தமானதாகும். இளந்தலை முறையினர் இப்பழைய நடிகர் பெயர்களையாவது அறிந்து கொள்ள உதவும் காங்கேசன் துறை நடிகமணி வி.வி.வைரமுத்து, அரியாலை கவிஞர் வி.ஐயாத்துரை, கே.இரத்தினம், அல்வாயூர் என்.கிருஷ்ணபிள்ளை, எஸ்.கந்தவனம், எம்.கனகசிங்கம், பி.சபாரத்தினம், வி.விருத்தாசலம், வி.பாலசிங்கம், துன்னாலை எஸ்.சோமசுந்தரம், வதிரி பீ.அண்ணாசாமி, என்.திரவியம், வீ.சிவலிங்கம், அல்வாயூர் வித்துவான் எம்.முருகேசன், வதிரி நகைச்சுவை நடிகன் ஏ.கோவிந்தசாமி, அச்சுவேலி மாக்கண்டு, யாழ்ப்பாணம் முத்துத்தம்பி, கோண்டாவில் பொன்னுத்துரை, வசாவிளான் மார்க்கண்டு, பருத்தித்துறை சின்னத்துரை, கரவெட்டி நற்குணம். புலோலி நடேசு, ஞானசீலன், வராத்துப்பளை தம்பு, மயிலங்காடு பூ.வைரமுத்து, மல்லாகம் குழந்தைவேலு போன்ற நடிகர்கள் கலைஞர் தம்பிஜயாவுடன் பல இடங்களிலும் பல மேடைகளிலும் நடித்துள்ளனர்.

நாடகக் கலைஞரான தம்பிஜயாவின் குடும்பமே ஒரு கலைக் குடும்பம். அவருடைய மகள் பர்வதாமணியும் மகன் கலாமணியும் சிறுவர்களாக அவருடனே நாடகங்களிலே நடித்துள்ளனர். மகன் கலாமணி தற்போது ஆக்க இலக்கிய எழுத்தாளராகவும் நாடக ஈடுபாடுடையவராகவும்

விளங்குகிறார். பர்வதாமணியின் கணவர் திரு.எஸ்.வன்னியகுலம் ஒரு விமர்சகர்; ஆராய்ச்சியாளர் இவர்கள் யாவரும் கலை இலக்கியங்களிலே ஈடுபாடு கொண்டவர்கள். இவ்வாறு ஒரு நல்ல கலைக் குடும்பத்தை உண்டாக்கிய மனத்திருப்தியுடனேயே கலைஞர் தம்பிஜயா அமரரானார்.

கலை, சோதிடம் போன்றவற்றினாலேயே இவருக்கு ஊரிலுள்ளவர் களிடையே விருப்பும் நம்பிக்கையுமேற்பட்டதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. அல்வாய் தெற்கிலுள்ள பல்வேறு சங்கங்களுக்கு இவரே தலைவர்; கோயில் பரிபாலன சபைத் தலைவர் இப்படியாகத் தான் வாழும் பகுதி மக்களுக்காகப் பல சமூக சேவைகள் செய்துள்ளார்.

கலைஞர் தம்பிஜயாவின் ஆன்மா எம்பெருமானுடைய பாதார விந்தங்களிலே அமைதியுற்று ஆறுதல் பெறுவதாக!



அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா அவர்கள் எமது கிராமத்தின் பெருமை சொல்லும் பிரஜைகளுள் ஒருவர். இவர் இம் மண்ணில் எழுபத்தொரு ஆண்டுகள் சிறப்புற வாழ்ந்தவர்; எமது கிராமத்தின் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தவர். இன்றும் எமது கிராமத்தில் தொடர்ந்து இடம்பெற்று வரும் சில நடைமுறைகளின் ஆரம்பகர்த்தாவாக விளங்கியவர். எமது அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிற் பரிபாலன சபையின் முதலாவது நிருவாகத் தலைவராக விளங்கிய அமரர் எஸ்.தம்பிஐயா அவர்கள், வடமராட்சியின் புகழ்பூத்த இசைநாடக நடிகரும் இசைநாடக அண்ணாவியாரும் ஆவார். பரம்பரை வழிவந்த சோதிடக் கலையைப் பயின்ற இவர் கைரேகை சாஸ்திரம் பார்ப்பதிலும் மனையடி சாஸ்திரத்திலும் கைதேர்ந்தவர் ஆவார். அமரர் தம்பிஐயா அவர்கள் மறைந்து முப்பத்தைந்து ஆண்டுகளாகின்றன. இவர் இம் மண்ணில் பிறந்து நூற்றைந்து ஆண்டுகள் கடந்த நிலையில், எமது கிராமத்தின் ஒரு வரலாற்று அடையாளமாக இன்று(2023.01.22) இவரது சிலை திறந்து வைக்கப்படுகிறது. இந்நிகழ்வின் சிறப்பை உணர்த்தும் வகையில் 'அண்ணாவியார் எஸ்.தம்பிஐயாவின் கலைப்புலம்' என்னும் இச்சிறிய நூலின் வருகை எஸ். தம்பிஐயாவின் ஆளுமைத்திறனின் வெளிப்பாட்டை அறிய உதவும்.

978-624-5881-77-2
978-624-5881-77-2